திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே அந்தச் சேவையைச் செய்வாரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உயர்நீதி மன்றத்தில் செய்கிறேன்.

விருத்தாசலம் பேரூராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு.

* வினா எண். 1022—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருத்தாசலம் நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின்சாரம் பற்றாக்குறையினால் மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆயில் இன்ஜின் அல்லது ஜெனரேட்டர் அமைத்து நகராட்சி மக்களுக்கு தொடர்ந்து குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் என்றால், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். 1980-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சுமார் 15 தினங்களுக்கு பகலில் மின்சாரம் வழங்க தடைப்பட்டதால், இரவு நேரங்களில் இயந்திரங்களை கூடுதல்நேரம் இயக்கி தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. தற்பொழுது நாள் ஒன்றுக்கு 22 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுவதால் குடிநீர் விநியோகம் யாதொரு தடையுமின்றி வழங்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) டீசல் என்ஜினை தருவிக்க நகராட்சி யினால் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப் புள்ளிகளை பரிசீலனை செய்து என்ஜினை தருவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. எஞ்சின் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அதற்கு இப்போது உத்திரவு அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஜெனரேட்டர் வாங்குவதற்கு அரசு அனுமதியளிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ் இராகவானந்தம் : என்னிடம் உள்ள தகவல்படி டீசல் எஞ்சினைத் தருவிக்க நகராட்சியினரால் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து எஞ்சினை தருவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் இருக்கிறது. தாங்கள் சொல்வதுபற்றி இங்கே தகவல் இல்லை.